K. V. Somasundaram
இ. 192
கூ.ப
2422
உ 88-அ-69

சிவமயம்

கணபதி துணை.

திருவெண்காட்டந்தாதி.

திருவெண்காட்டுச் சித்திவிநாயகர்
ஊஞ்சல்,
எச்சரிக்கை, பராக்கு,
லாலி, மங்களம்.

8.41-6
SUP

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல. 7, 57 ... ஒழுங்கை,
கொழும்பு

யாழ்ப்பாணத்து மாவிட்டத்து

பிரம்மஸ்ரீ.
சி. அகிலேஸ்வர சர்மா அவர்களால்
இயற்றப்பெற்ற

சொக்குவில்
சோதிடப்பிரகாசயந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

துந்துபிஇல் ஆவணிமீ,
1922.
விலை சதம்-௨0.

உ

சிவமயம்.



முகவுரை.

யாழ்ப்பாணநகரின் தென்பாகமாய் அதிசமீபத்தில் உள்ள மண்டைதீவில், திருவெண்காடு என்னுங் கிராமத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானுக்கு ஒரு தோத்திரப்பாமாலை செய்யவேண்டுமென்று பன்முறை நினைந்தும், தமிழ்நூலிலக்கணப்பகுதி யொன்றுந் தெரியாப் பாமரனாகிய யான் பாமாலை தொடுக்க அவாவி முயலுதல் "முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைவைத்தாற்" போலிருக்குமென்று அந்நினைவை யொழிந்துவிட, சென்ற பங்குனிமீ ௧௨ காலை நித்திரை விட்டெழும்போது கட்டளைக்கலித்துறையிசையில் இருவரி என்னாக்கில் வந்தது. பெருமானுடைய பூசைசெய்து வீட்டிற்குச் செல்லும்போது அடுத்த இருவரியும் பொருந்திற்று. அடுத்ததினம் பாட்டின் முடிபு எழுத்திலிருந்து ஒருசெய்யுள் பாடிமுடிந்தது. இவ்வண்ணம் நாளொன்றுக்கு ௩, ௪ ஆகப் பாட்டுகள் பெருகிவந்

தன. பங்குனி௴ ௨௫௳ வரையில் ௯0 செய்யுள்கள் வந்தன. அந்
னமாகவும் தொடராகவந்த இச்செய்யுள்கள் ௧00-ஆக முடிந்தா
லன்றோ அந்தாதிமாலையாகும், சிறியேனுக்கிது நிறைவேறுமோ
என்னுஞ் சந்தேகம் என் மனசில் வியாகூலமாயிற்று. இங்ஙனமாக
வும் சித்திரை வருஷப்பிறப்பினன்று நூறு பாக்களும் நிரம்பியன.
பெருமானுடைய திருவருட் பிரசாதஞ் சற்றுப்பதிந்தமையாலன்றி
இப்பாமாலை வனைதல் சிறியேனாலியலாதென்பதை நுண்ணறிவா
ளுயர்ந்த பெரியோர் சித்தசமாதானஞ்செய்வர்.

இனி, இச்செய்யுள்மாலையிற் குற்றஞ்சொல்வாரின் இயல்
பைச் சொலின், முன்னைநாளில் "தருமி" என்னுஞ் சிவவேதியன்
பொருட்டு ஆலவாயமர்ந்த அந்திவண்ணனாரருளிய கவியிலும் "நக்
கீர" ரென்னும் சங்கப்புலவர் நவைபுகன்றாரெனில் இம்முழுமகன்
கவியில் வழுவெடுத்துரைத்தல் புலவர்க்கரிதன்று. ஆயினும், வித்தை
வல்லப மொன்றினில்மாத்திர மெத்துநாவலர் தஞ் சித்தம் எள்ளி
னும் எள்ளுக. முந்துசெய்தவத்தாற் சிந்தை நெக்குருகும் அந்த
மிலன்பராஞ் செந்தமிழ்ப்பாவலர் இதனைத் தம் புந்தி கொள்வா
ரென்று கோருகின்றனன்.

சிறியனேன்றனையுமொரு பொருளெனக்கொண்டு திருவருட்
பிரசாத வல்லபந் தந்து தம்மீது கவிமாலைபுனைவித்த சித்திவிநாய
கப்பெருமானை மனமொழி மெய்களாற் றுதித்துப், பெருமானு
டைய இத்தோத்திரப் பாமாலையைப் பரிசோதித்து நன்கு தீது
காட்டிய கவிப்புலமையாளர்க்கும், இதனை ஏனைய அன்பர்கட்
கும் உபயோகமாகும்பொருட்டு அச்சிடுவித்தற்குப் பொருளுப
கரித்துதவிய புண்ணியசீலர்கட்கும் மனமுவந்த வந்தனத்துடன்
நன்றிகூறுகின்றேன்.

மண்டைதீவு: துந்துபி௵ ஆவணி௴ ௧௫௳.

இங்ஙனம்,

சி. அகிலேஸ்வர சர்மா.

உ

சிறப்புப்பாயிரம்.

வண்ணைச் சைவப்பிரகாசவித்தியாசாலை
ஆசிரியர்
ஸ்ரீமத். தி. கிருஷ்ணபிள்ளை அவர்கள்
சொல்லியது.

மணியாழி திரைசுலவ வந்த சோதி
மதிக்காவின் னிலாமுகிதேர் மண்டை தீவிற்
கணியாழி வளமிகுத்த திருவெண் காட்டுக்
கதித்தமருங் கற்பகத்துக் கணிய தாக
வணியாழி யகப்பொருணூற் றுறைவி ளங்க
வந்தாதி மாலைதொடுத் தணிந்தான் யாரும்
பணியாழி யகிலேச சன்ம னென்னப்
பலர்புகழ்நான் மறையுணர்ந்த பாவ லோனே.

வண்ணைநகர்
ஸ்ரீமத். க. வைத்தியலிங்கபிள்ளை அவர்கள்
சொல்லியது.

காமணக்கு முயர்மண்டை தீவில்வைகுங்
கருணைபொழி சித்திவிநா யகர்மேற் றூய
நாமணக்குந் திருவெண்காட் டந்தாதிப்பேர்
நலந்திகழ்நன் னூலொன்று நவிற்றினனால்
தேமணக்கு மாரலிநகர்ச் சிதம்பர நாதமுனி
செய்தவத்தில் வந்துதித்த சீர்பெறுநற் புதல்வன்
பாமணக்கு மகிலேசு வரசர்மாவென்னும்
பண்புதரு நாமமுள பாவல்லோனே.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித்
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமத். ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளை அவர்கள்
சொல்லிய

வெண்பா.

விண்காட்டுஞ் சோலை வியன்மண்டை தீவுமலி
வெண்காட் டியானைமுகன் றுள்வேண்டிப்—பண்காட்டும்
பாமாலை யந்தாதி பாடியகி லேசுரசன்
மாமாலை தந்தான் மகிழ்ந்து.

சுன்னாகம்
இராமநாதவிதாலயத் தமிழ்ப்பண்டிதராகிய
ஸ்ரீமத். ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள்
சொல்லிய

வெண்பா.

விண்காட்டு சைவ வெழின்மண்டை தீவிற்றிரு
வெண்காட்டு மேவும் விநாயகற்கு—பண்காட்டு
சந்தவந் தாதியொன்று தந்தான் வரகவியாய்
வந்தவகி லேஸ்வரசர் மா.

அவையடக்கம்.

இன்பஞ்செய் வாரண மின்னிசை யாப்பணிந் தேத்தினர்க்கே
பொன்பஞ்ச பாணியன் வெண்காட்டு ளேமன்னு புங்கவன்மே
யன்பின்சொ லார்பெற்ற வானந்த மூர்த்தி யணிவனென
வென்புன்சொற் பூப்பிணைத் தந்தாதி யாரமொன் றீந்தனனே

தென்னன் மதுரை வளர்ந்திடு மூவுரைச் செந்தமிழா
மன்னன் மதுரத் திலக்கண நூலின் மரபறியான்
பன்னும் புதுமொழிப் பாவினைச் சங்கம் பழிசொல்வரே
லென்னென் றவர்க்குத்தகும்விடை யீகுவனேழையனே.

முற்றுந் தவறுள புன்மொழி யாயினும் மூடனென்சொல்
சுற்றும் புனறவ ளாரணி யத்தமர் தும்பியையே
பற்றுங் உளத்தெழு காதலி னூற்றெழும் பாவிதன்றே
குற்றஞ்சொ லாமற்றஞ் சித்தங்கொள் வார்கவிக் கொற்றவரே.

உ
சிவமயம்.

திருவெண்காட்டந்தாதி.

காப்பு.

செல்வங் கதிதரு மீசனும் மாதுமுன் சேர்ந்தருளால்
வில்வங் கமழ்பொழின் மண்டபத் தோவிய வேழங்களால்
நல்குங் கயமுகத் தெந்தையெற் கொண்டு நவில்விக்கவே
சொல்வன் கருணைவெண் காட்டினந் தாதியத் தோன்றலுக்கே.

நூல்.

1. அருளிந் திரையொடு போகநல் வாழ்வு மளிக்குமுன்னே
* னிருளந் தகர்பன் னிருகோடி கூடி யிலங்கியென்ன
வருமிந்து சேகரன் வெண்காட்டு மந்திரம் வைகுழியெம்
மருளந்த காரங் கெடவரும் போதமு மாவின்பமே.

2. மாதான மாந்திரு வெண்காட்டு வாச மருந்தனையாய்
கோதான நம்வினை சிந்துமு வாவுங் குருபரனு
நீதான லாதிங்கு மற்றுமுண் டோதெய்வ னெஞ்சத்தளி
வாதான வர்க்கரி யேறுமை யாடரு மாணிக்கமே.

3. மாணிக்க மின்னொளி வண்ணத்து மேனி வரதத்தனே
வாணிக்கு நாதனு மோதறி யாத்திரு மந்திரமே
நாணிக்கு விற்கரச் சித்தசன் றாதையி னுடரியா
யேணிக்கு நாயக வெண்காட்டி னீசவென் றேத்துமினே.

4. ஏத்திடு கின்றமெய்த் தொண்டர்தம் மன்புக் கிருப்பிடமாய்ப்
பூத்திடு கின்றவு ளக்கம லத்தொளிர் பூரணனே
மாத்தவ மெல்லியல் வல்லபை பாகன் மறலிகயி
றீர்த்திடும் வேதனை தீர்க்கவெண் காட்டி னிறைநண்ணுமே.

5. நண்ணிடு மன்பர்க ணாடிய வேட்கை நமசமயத்
தெண்ணிடு கல்விக் கழகங்கள் யாவு மிதம்பெறவே
விண்ணருள் வெள்ளம் பொழிமத வேழவி நாயகனை
மண்ணுல கோர்புகழ் வெண்கா டகத்து வழுத்துமினே.

* இருளந்தகர்-சூரியர்.

6. வழுத்துமி னந்தம தக்களிற் றானன வள்ளலையே
பழுத்துள மூறுசெந் தேன்கனி யைத்துதி பன்னுமுத
லெழுத்துரு வான பரிதியை நெஞ்சி லிருத்துமின்னே
கழிப்புனல் சூழ்திரு வெண்கடத் தாலயங் காலிக்குமே.

7. காலிக்கு மின்னொளிக் கற்றையு முற்றுங் கருணைவெள்ளம்
பாலிக்கு மின்ப நயனங்கண் மூன்றும் பவந்தொலையச்
சூலிக்கு முன்னருள் செய்தபி ரான்சுதன் றோன்றமுத்துச்
சூலிக்கி னம்மலி வெண்கா டகத்திற் றுதிமின்களே.

8. துதிபுரி வேலையிற் போதமெ னும்பயிர் சூழ்ந்தழித்தே
சதிபுரி யும்புல வேழங்கள் வீயத் தவளவனந்
திதிபுரி யும்பரன் செங்கையி லங்குசஞ் சேர்ந்ததென்றே
மதிபுரி செஞ்சடை முன்னவற் போற்றுவர் மாதவரே.

9. மாதவ னாகிமுன் வாசவன் றான்வைத்த நந்தவன
மாதவ னாரழற் காய்கின்ற வேலையவ் விந்திரற்கா
யோதவெண் குண்டிகை வான்னதி யுந்து மொருத்தனைப்
போதவெண் காடுறை யேரம்ப னைத்தினம் போற்றுமினே.

10. போற்றிடு மைந்துக ரப்புது வேழமுன் பொங்குமன்பா
னோற்றிடு மங்கைவன் றொண்டனுஞ் சேரனு னோக்கமுன்னாய்த்
தோற்றிட வெள்ளி விலங்கலி லேயுய்த்த துதிக்கையனே
கூற்றடு கோமகன் வெண்கடத் தான்சரண் கூடுமினே.

11. கூடலை மந்திரங் கொண்டருள் செல்வன் குமரன்விளை
யாடலை மந்திர மோதின ரேகண் டகநயப்பர்
வாடலை தந்திர மற்றிது வேசெய வாமனமே
கோடலை சிந்துறை வெண்கா டெனு னங்கள் கோன்பதிக்கே.

12. பதிதரு மன்பர்தங் கவ்வையை வௌவிடும் பாசமுனல்
வதிதருஞ் சிந்தை வயகிங்கு மங்குச வான்படையுங்
கதிதர வுந்துங் கலைபுகழ் வெண்டிருக் காட்டிற்கண
பதிவரு மிந்த வடிவாமெ மக்குப் பரமுத்தியே.

13. முக்திசையும் பண்ணை வெண்கா டகத்து முளைத்தெழுந்தே
[illegible]செயுந் தொண்ட ரெவ்வ மெனுமிருள் பாறுவித்தே
[illegible]ரெ யுஞ்சிவ சின்மய மேனை தினகரனை
[illegible]செ யுந்தக வற்புதந் தாலெமக் கானந்தமே.

14. ஆனந்த மான வருண்மதம் பாய்தரு மண்ணனுட
னானந்த மாம்வண்ண மந்தகன் சாடுந் தருணத்திலே
* யானந்த மான வபய கரமளித் தஞ்சலெனாத்
தேனுந்து வான்பொழில் வெண்கா டெனும்பதி சேர்ந்ததுவே.

15. சேய்ந்தற்கு முந்தியம் மாங்கனி வாங்கிய செல்வனிந்து ‡
காந்தன்மெய்த் துன்று கடும்பிணி தீர்த்த கயமுகத்தம் [ப்
வேந்தெமக் கென்றும் வினையாங் கொடுஞ்சிறை வீட்டுதற்காய்
பூந்திருத் தங்குவெண் காட்டகம் வாழும் புதுமையிதே.

16. புதுக்கர மொன்றுட னீரிரு செங்கைகொள் பூரணனை
மதுக்கர வீரங் கமலமந் தார மலர்சொரிந்தே
துதிக்கர வம்மினு பந்தனத் தான்வெண் சுரப்பதிசெய்
விதிக்கர சாந்தந்தி தாண்டவத் தோடுளம் மேவுமன்றே.

17. மேவிய காலத்தெம் விக்கினம் பீறி வினையகற்று
மாவியி னாயகன் வல்லபை யென்றுரை யம்பிகையாந்
தேவியி னாயகன் சித்திவி னாயகன் சேவடியைத்
தாவிய நேயரில் வெண்காட் டுவாமுகன் றங்குவனே.

18. தங்கிய முத்தலை வேற்படைத் தாதை தருமுதற்சேய்
பங்கய வுத்தமி மன்னுவெண் காட்டிற் பசுபதியே
துங்கம தக்களிற் றண்ணல்மெய் யன்பிற் றுதிநெஞ்சமே
யங்கிய மன்வந் தடும்போது காக்க வடைந்திடுமே.

19. அடைந்திடு மாறனக் கம்பிகை சாபத் தரவுருவம்
மடிந்திட வாலடி யன்றருள் செய்த மதக்களிறே
யுடைந்திடு மாறெமக் காணவ மென்னு மொருத்தலையே
தடிந்திடு நீதவ ளாரணி யத்தனைச் சார்மனமே.

20. மனந்தனி லேயுறை மாணிக்க மாமணி மன்னுதினைப்
புனந்தனி லேயிரு கோட்டு களிறுமென் புத்தமிர்தந்
தினந்தின மாய்நங்க டவினை பாற்றிடுந் தெய்வம்வெள்ளை
வனந்தனி லேயுள தென்னினி மற்றொரு வான்பதமே.

21. வான்பதத் தின்ப வளனுகர்ந் தானும்வெண் மாமலரான்
றன்பதந் தந்து வரமளித் தானுநற் றார்துளப

---

* ஆன்-அசை-அந்தம்-அழகு.
‡ இந்துகாந்தன்-சோமகாந்தன். (விநாயகபுராணம்.)

மான்பதந் தானெதிர் வந்திட்ட போதினும் வாழ்வெமக்குத்
தேன்பத மானுவெண் காட்டொரு தந்தன் றெரிசனமே.

22. தெரிசன மாமணித் தொந்தியுஞ் சிந்துரச் செம்முகமும்
புரிசடை மாமுடி யும்மணி வன்னஞ்செய் பொற்புருவும்
பரிசன யாந்தொழச் சந்தத மும்மருள் பாலிக்கவே
யரசன முன்னவன் வெண்கா டகத்து ளமர்ந்தனனே.

23. அமர்தரு மாலந் திருமிடற் றைய னருணயத்தா
னுமைதரு மாதந் தியானனப் புங்கவ னும்பரஞ்சச்
சமர்புரி வெய்யவன் *றாமனை வீட்டொரு தந்தனிவன்
நமர்பிணி காய்ந்திடும் வெண்கா டதிற்றெய்வ நாயகமே.

24. நாயக மானம்பி நம்பினர்க் காவி நளினமலர்
மீயக வானவ னல்கிடச் செய்தவன் விக்கினம்வி
நாயக னுமவ னண்ணுமி டம்வெள்ளை நாவன்மரம்
மேயக மாந்திரு வெண்கா டெமக்கின்ப வீடதுவே.

25. வீடுந் தருமெமக் கம்மையி லிம்மை வெறுக்கைகளும்
பீடுந் தருங்கலை ஞானமு மெல்லையில் பேரின்பமுங்
கூடுந் திருவருட் குஞ்சரம் வந்து குடிகொள்ளும் வெண்
காடுந் தருஞ்சிவ லோகப் பதமினிக் காண்மின்களே.

26. காணு மிடங்கண நாதன் திருவுருக் காதலன்பு
பூணு மிடம்மனப் பொற்கம லம்மெந்தை பூம்பதந்தான்
பேணு மிடந்தவ ளாரணி யப்பதி பீடுபெறிற்
றூணு மடங்கல் சரணங் கதியென்று சார்மின்களே.

27 சாரும் புதுமலர் கைக்கொடு வந்துன் சரணடைந்தே
யார்வம் பதிமனத் தானந்த மாய்நினை யர்ச்சிக்கவே
பேரன் பெனும் பெறு பேறுன்று தந்தருள் பெற்றிடயான்
பாரும் பரும்புகழ் வெண்கா டமர்ந்திட்ட பண்ணவனே.

28. பண்ணுல வுந்தமிழ்ப் பாமணி மாலைப் பனுவல் சொல்லி
விண்ணுல வும்புகழ் கண்ணிய னுய்த்திகழ் வெள்ளைவனத்
துண்ணில வுந்தனித் தந்தியைச் சிந்தை யுருகத்தொழி
னெண்ணில் பவந்தொலைந் தின்பமு ஞானமு மெய்திடுமே.

* தாமன் - தாமாசுரன். (விநாயகபுராணம்.)

29. எய்திடு மாரனை யங்கனற் காய்ந்திட்ட வேந்தறரும்
பெய்திடு மாமத குஞ்சர மான பிரணவமே
யுய்த்திட நாமென்றும் வெண்கா டகத்தி னுகந்துதயஞ்
செய்திடு மாமெனி னங்கட வப்பயன் சித்திக்குமே.

30. சித்திக்கு மானந்தச் செந்திரு மேனியைச் சேருந்தவப்
புத்திக்கு மின்பம் புகுவித்த நாதனைப் பொன்னடிக
ளெத்திக்கும் வான்றந்த வெண்கா டதிற்றொழு தேத்தியக்காற்
றித்திக்கு மானந்தஞ் சிந்தையுள்ளே வந்து தீங்கடுமே.

31. தீங்கதலிக்கனி தெங்கிளங் காய்வெல்லஞ் சென்னெலவல்
மாங்கனி மோதகம் முன்வைத்து வெள்ளை வனந்தனிலே
யாங்குமை யாதரு மைங்கர யானையை யர்ச்சித்திடி
னோங்கிய பாவின மோதிடு ஞான முதித்திடுமே.

32. உதித்திடு மாம்புந்தி யுள்ளுணர் போதத் தொளி விளக்கே
சதித்திடு மாமந்தப் பேரின்ப சாகரங் காணிலன்பு
பதித்திடு மாமந்தண் பாதச ரோருகம் பாவமெலா
மிதித்திட வேதந்தி வெண்கா டகத்து வெளிவந்ததே.

33. வந்திடு மாதியின் வல்வினை காதிநல் வாழ்வு நித்தந்
தந்திடுஞ் சோதியைச் சண்முகற் காதியைத் தந்தமொன்றின்
சிந்திடும் பாதியைச் சேர்கரத் தாதியைச் சிந்தைசெய்தே
யுய்ந்திடு மாதவம் வெண்கா டகத்தென் றுரைமின்களே.

34. உரைதரு மாணிக்கத் தொண்கதிர் மேனியு மொப்பில்கொம்பு
ணிரைதரு பாணிக்கு னங்குச பாசன் னிலவுமிழப்
பரைதிரு மாமகன் மூடிக மேற்கொள் பவனியொன்றே
திரைதரு மாற்கடல் வெண்கா டதிற்சிந்தை செய்மின்களே.

35. செய்யவ னுயகற் கன்றருள் செய்துஞ் செருமுயன்றே
வெய்யவ னுய்வருந் தானவ னுருவின் மேலிவர்ந்தும்
வையகந் தான்புகழ் வெண்கா டுகந்தருள் வாரணத்தின்
மையல் கொள் வாய்மன மஃதன்றி மற்றொரு வாழ்வில்லையே

36. வாழுஞ் சுகநெறி கேட்குதி யின்னும் மடநெஞ்சமே
யாழுஞ்சு மந்தக் *கடல்குடித் தான்குட்ட வாவியடி

* கடல்குடித்தான் - அகஸ்தியமுனிவர்.

தாழஞ்சலி செயத் தான்வர மீயுந் தவளவன
வேழஞ்ச ராசர வீசனென் றேத்துமெய் நாமத்தையே.

37. நாமமு மோவின்றி நாளுஞ் செபித்திட நாவுளதே
தீமன மேயிங் கவமே களித்தனை சீறியமன்
தாமமும் வீசுழி யென்செய்கு வாயித் தவளவனத்
தேமமு மாய்வரு மேந்தலை யென்று மிருத்துவையே.

38. இருத்தி யளித்திடு மேத்திய வன்பர்க் கிமய வெற்பி
னொருத்தி யளித்திடு மோமெனும் யானையை யுள்ளுனங்கள்
கருத்தை யலைத்திடுங் காமிய மான கடும்பிணிதீர்
மருத்து மலைதவ ளாரணி யப்பதி மன்னியதே.

39. மன்னிய காதலி னின்னமு தூட்டு *மதலைக்குமுன்
னுன்னிய போதத் துயர்கலை ஞான முணர்த்தியவன்
பன்னிய வாதர வின்மொழி கொண்ட பகவனையே
மின்னவ மாழிகை வெண்கா டகத்து விரும்புமினே.

40. விரும்பிய பாம்பணி வேணிய னார்தரும் வேழமொன்று
வரும்பிய பூம்பொழில் வெண்கா டகத்தி னமர்ந்துலவிக்
§கரும்பையி லே[illegible]ம்பிய தாருயிர்க்கன்று கருணைமதன்
னிரம்பிய தாம்பணி செய்திருந் தங்க ணினைமின்களே.

41. நினைகின்ற வேலை நிரதிச யானந்த னேருமிந்து
புனைகின்ற வேணிப் புனிதன் றிருமகன் பொன்னுருவம்
வனைகின் றிலை கொல்மனமேயிவ் வெள்ளை வனத்துகந்த
கனியொன்று தானுஞ் சுவைத்திடு வல்வினை காய்ந்திடுமே.

42. காயுங் கனியுங் கமழ்கின்ற தேனொடு கன்னலுமாய்த்
தோயுங் கருணைச் சுகவாரி தியினைச் சூழ்ந்திறைஞ்சி
நேயங்க தித்துத் தவளா ரணியத்து நெக்குருகிற்
றுயுங் குரவனுந் தந்தையு மாயின்பந் தந்திடுமே.

43. தந்தையி லான்றந்த சாகாத பெற்றித் தந்தியைமுன்
றந்தவை யாலதஞ் செய்திட்ட தந்தி தவளவனத்
தந்தமி லாதியு மாருயிர் நண்பனு மன்னையுமாந்
தந்தையு மாதலிற் சிந்தையி னேதந் தவிர்மின்களே.

* மதலை - நம்பியாண்டார்நம்பி - திருத்தொண்டர்புராணம்.
§ கரும்பை - கருப்பை.

44. தவமுனிக் கன்று கொடியிரு வான தயாபரனைச்
சிவமுனக் கென்றந் திகழ்விக்கு ஞதனைச் செய்யுமுன்னைப்
பவமினிக் குன்றிடப் பால்வனம் வந்த பரங்கருணை
நவமுனிக் குன்றினை யென்னுளு மேத்துதி நன்னெஞ்சமே.

45. நெஞ்சகந் தன்னி னிலவுங் களிறு நிருத்தஞ்செயச்
செஞ்சரண் மன்னுச தங்கைக லீலெனுந் தேவர்பிரான்
மஞ்சகந் தன்னிடை மின்னிளை மானும் வடிவின்பெற்றி
யஞ்சுகந் துன்னு தவளா ரணியத் தறிமின்களே.

46. அறியுந் தமிழினச யாரணந் தன்னை யகிலமெல்லாஞ்
செறியுந் திருவருள் செய்தமெய் ஞானச் சிவக்கன்றுதா
னுறையுந் தவள வனந்தனி லேகலை யோதுவித்த
நிறையுந் திருவரு ணீமன மேதுதி நித்தலுமே.

47. நித்தன்ப ராபர னின்மல னேமிக் கரத்தனய
னத்தன்ப ராவுங்கவிக் கண்ணி யன்பர்சொலவணிந்தோன்
மெத்தன்ப வாவிநம் வெண்காட்டிறைவனை வேண்டித்துதி
சித்தம்வி ராவிய தீவினை யாங்கலி தீருமின்னே.

48. இன்னல் விளைந்திடி னேரம்ப னுமை மிருந்துளதே
சென்னெல் விளைந்திடும் வெண்கா டதிற்செல்வந் தேங்கிவருங்
கன்னல் விளைந்திடு நேயருக் கேரசக் கட்டிகர
வுன்னல் களைந்திடும் பேரின்ப யானையென்றோதுமினே.

49. ஓதிவைத் தாரணஞ் சீரணி நம்பிக் குகந்துமதிப்
பாதிவைத் தாறலை செஞ்சடை யான்ற தன் பால்வணத்தே
யாதிவைத் தான்பத மன்புவைத்தோ[illegible] யன்றமுத்திச்
சோதிவித் தாய்நின்ற தும்பியி னுடல் துலங்கியதே.

50. துலங்கும் படிமகன் றாயின் பாதந் துதித்தவெல்லை
யிலங்கும் படிநவக் கோட் பதம் வான்றந்த வேந்தலெமைக்
கலங்கும் படிசெயுங் காமியப் பேயினைக் கட்டிவைத்தே
வலங்கொண் டடிதொழு மாவரந்தாவெண் வனத்தந்தியே.

51. வனப்பமர் மூடிக வாகன மூர்ந்து வரும்பவனி [ள்ளே.
தனைப்பெரு வாழ்வெனத் தாமுணர்ந் தோர்வந்து தாழும்வெ
வனப்பெரு மானின்ப வாரியதான வடிவொன்றையே
நினைப்பவர் பாலன்றும் *பால்வண்ண மாதுன் னிலவுவளே.

* பால்வண்ணமாது - சரசுவதி.

52 நிலவின் கலைகங்கை நீள்முடிக் கொண்ட நிமலன்றரப்
பலவின் கனியெள்ளின் பாகு விளாங்கனி பால்வனத்தே
குலவுங் கலையறி மெய்யடி யார்தரக் கொண்டருந்தி
யுலவுங் கருணை மதம்பொழிந் தார்க்கு மொருத்தலொன்றே.

53. ஒருத்தனி நாயக வுள்ளன்பி ளுல்வெஃகி யோலமிடின்
கருத்தினில் நாயக மாமணி யாயுறை கண்ணியசெய்
யிருத்திவி நாயக வெண்காட் டிறைவ வெமகக்கருணீ
மருத்துவ நாயக நோய்சிந்தி யோர்தந்த வாரணமே.

54 வாரணங் காய்ந்துரி போர்த்தசெம் மேனி வயவன்சுதன்
வாரண மேந்தரிக் கன்றருள் செய்த வரம்பிலின்ப
பூரணன் காணவற் கன்புசெய் வாய்புந்தி புந்திக்கெலாங்
காரணன் காண்வெள்ளைக் காட்டகத்தானக் கணபதியே.

55 கணபதி யென்றநெஞ் சக்கமலத்திலிருத் துமன்பர்க்
கணவதி யெங்குற்ற போதினு மங்கே களைந்துதெய்வக்
கணவதி காரஞ்செய் யாட்சிதந்தாழ்வோய் கதிர்மதிதீக்
கணவதி திக்கினி யாரேத்த வாழ்வெள்ளைக் கானரசே.

56. காங்கத் தேவிற் பிடித்திடு வேட்டுவன் கண்ணுகந்த
பானகத் தேவன் பயந்தன்று தந்த பருத்தகைம்மா
மானகத் தேவரும் வள்ளியைச் சேய்க்கு வகுத்தவெள்ளைக்
கானகத் தேவன் பதவன சங்கள் கருதுமினே.

57. கருப்பு வரிச்சிலை மாதுளங் காய்கரங் கொண்டுகண்டோர்
விருப்ப முறத்திரு வெண்காடு மேயவி நாயகனே
யிருப்பு மனத்தறு கண்மையைத்தாக்கி யிசைந்தவன்பு
திருப்பி மனத்துயர் சிந்திடு வான்வந்த தெள்ளமுதே.

58. தெள்ளிய பாலப்பஞ் சிற்றுண்டி மோதகந் தேனிக்குடன்
வள்ளியின் மூலனி வேதன மாய்முன்னை வந்திக்கவே
துள்ளியபாதத்துத் தும்பிதன் றுண்டவச் சூட்சியெல்லாம்
வெள்ளையங் கானகப் பொற்பதி தன்னில்வெளிப்படுமே.

59. வெளிவரு கஞ்ச மலரன்ன பாதம் விரும்புதிநீ
களிவரு நெஞ்சம் வெண்காட்டிறை வேழக் கருணைமழைத்
துளிதரு தஞ்சமொன் றேயடைதற்கருந் தூயசுகம்
விளிவுறும் வஞ்சக் கொடும்வினை நாமம் விளம்புதியே.

60. விளவின் மதுரத்து மென்கனி நாவல் விரும்பியவன்
களவின் மதுரக் கனிவள்ளி சேய்கொள்ளக் காத்தவள்ள
லளவின் மதுரத் தருட்கனி வாழ்வெள்ளை யவ்வனம்போற்
றுளவின் மதுமல ரோன்பதந் தானுஞ் சுவைப்பதன்றே.

61. சுவைக்கு மதிசயஞ் சொற்கடங் காத்தும்பி தன்கரமஞ்
சுவைக்கு மதிசயம் யாரறி வாரிம்மைத் தொல்வினையெஞ்
சிவைக்கு மதிசயந் தான்சொல்வ மோவின்னுந் தூயயா
சிவைக்கு முதன்மகன் பால்வனத் தான்றிறஞ் செப்புமினே.

62. செப்புங் கைலை மலைத்தனி நாயகன் சிந்தைசெய்த
விப்பங் கயக்கழல் முன்னவன் பெற்றி யியம்பவெனில்
துப்பங் கயற்கண்ணி சுந்தரி தான்சொல வல்லளன்றி
யுப்பங் கயத்தனும் மாலும்வெண் காடனை யோதரிதே.

63. ஓதக் கடலிடை வெண்கா டுகந்த வொருத்தல்பிரா
னோதக் கடலி னிடைப்பட் டழுங்கி யிருக்குமெமைப்
போதக் கடசல் மாம்புணை தந்தும் புகலடையப்
பாதக் கடற்றுறை சேர்த்திடும் பான்மை பகர்மின்களே.

64. பகலிர வென்னும் படிபல மாயம் படர்ந்தமர்செய்
யகலுர மன்*னிரு வந்தகர்க் காதிய வைங்கரவெம்
மிகலர வின்னுப வீதத்து வெண்காட் டிலங்கிறையான்
புகலர வம்முறப் பொற்செவிக் கின்னும் பொருந்திலதே.

65. பொருந்தம் மலர்வனம் போக்கிய பொன்னி புகப்பிரிந்தே
வருந்தம் மலைமுனி குண்டிகைக் காக்கிய வள்ளலென்றே [ணி
யிருந்தம் மலர்ப்புனல் வாவிவெண் காடனை யெண்ணியெண்
யருந்தும் மலப்பிணி தீர்க்குமெய் ஞானத் தருமருந்தே.

66. அருளுந் தியநற் பூருசுண்டி யென்னு மருந்தவற்கே
மருள்சிந்தி யுன்றன் வயங்குரு வீந்தனை மாயையெனு
மிருள்வந்து நெஞ்ச மிகல்கின்ற தையா விதையகற்றும்
பொருடந்தி மாமுகப் போதவெண் காடநின் பொன்னடியே.

67. பொன்னி வருந்திரு வெண்காட் டம்பதி புக்கமர்ந்தே
மன்னி வருஞ்சுக வாரண மேகண்ணுள் மாமணியே

*இரு அந்தகர் - தேவாந்தகன், நராந்தகன் என்பவர். (விநாயக புராணம்.)

யுன்னி லரும்பெருந் தேன்கனி யேசித்தத் தொள்ளொளியே
பன்னி யருந்திடும் பாலமு தேயன்பு பாலிப்பையே.

68. பாலட னெஞ்சத் * தொருமறை யோனுந்து பாசத்தினற்
பாலடி சிற்றரக் கைதொட்டு மேபந்த பாசஞ்சிந்திப்
பாலடர் முத்தியு மீந்தன னீமனம் பற்றுவையிப்
பாலட வித்திரு மந்திரத் தெந்தை பயந்திடுமே.

69. பயந்தந்து சந்தத முந்தீமை யாற்றிய பாவிசிந்து
வயந்தந்த மாய மகன்றிட வேசெற்று மன்னுயிர்க்கே
நயந்தந்த சித்தி விநாயக நம்பியை நற்றவத்தோர்
கயந்தந்த பேரருள் வாரியென் பார்வெள்ளைக் காட்டகத்தே.

70. காட்டுந் தவளவிற் கொம்பொரு வாரணக் கன்றுபுக
ழூட்டுந் தவள வனப்பதி மேவிய நாயகனீ
கூட்டுந் திருத்தக வெற்குறு காமைவன் கோட்புரிந்த
வீட்டுந் தனையரி சேதனத் தேதியி னிக்கணமே.

71. கணங்கடு திக்கமுன் வெள்ளியம் மால்வரைக் காவில்வருங்
குணங்கொடு திக்கரக் குஞ்சர மேயென் குருபரனே
யணங்குசி தைத்துளத் தன்புத ராவிடி லாகெடுவேன்
மணங்கம லத்திரு வாழும்வெண் காட்டுறை வானவனே.

72. வான்கொம்புத் தேனைம கிழ்ந்துள்கு வார்புல்லர் மானிலத்தே
தான்பம்புதேனெனத் தன்னுகந் தார்க்கின்பந் தந்த§வெள்ளைக்
கான்†கொம்புத்‡தேனைநெகிழ்ந்துள்குவார்செல்கதிசொலவே
நான்கம்பித் தேனுட னென்னுறை வாணியுன் னணிநனே.

73. நாண்கொண்ட செங்கருப் பந்தடி பூங்கணை நற்கரத்தன் [ப்
சேண்கொண்டவல்லபைசெந்தொடையேமன்னத்திகழ்கிம்புரி
பூண்கொண்ட குஞ்சரம்வெண்காட்டிற்போதமழைபொழியும்
மாண்கொண்ட வேயென வென்புரு காவன்பு வைக்குதிரே.

74. வைக்குமு தன்மைத் திருவருண் முன்னம் மறைக்கபிலன்
றுய்க்கும தன்பயன் றேன்றுசிந் தாமணித் துங்கவனே

* ஒருமறையோன் - நம்பியாண்டார்நம்பி.

§ வெள்ளைக்கான் - வெண்காடு. † கொம்பு - ஏகதந்தத்தையுடையவ ரும். ‡ தேன் - மெய்யன்பருளக்கமலத்தில் தேன்போன்ற. (விநாயகபுராணம்.)

மிக்கம தஞ்சிந்து வேழம்வெண் காட்டிறை வேட்கைநின்னிற்
றைக்கும்வி தன்பு தந்திடு வாயென்றும் தாடொழவே.

75. தாட்டங்கி வாழ்ந்திடத் தண்ணருட் டேனினைத் தந்துமிருள்
காட்டங்கி யென்னத் தகித்திடுந் தந்திக் கணபதிதன்
நாட்டங்கி டைக்கமுன் னற்றவ மேயில்லை நாளுமினி
வேட்டங்கி நாட்டத்து வெண்காட் டிறைவனை வேண்டுவமே

76. வேண்டும்வ ரம்வெள்ளைக் கானவன் பாதத்து மென்மலரே
தாண்டும்ப வக்கடற் றெப்பமென் றேயுள்ளந் தானுறுத்தி
யாண்டும்ம வன்றிரு நாமங்க ளோதியென் னளும்பணி
பூண்டும் பரனிவன் பொற்றிரு மேனியும் பூசிக்கவே.

77. பூசிக்†கு ராத்தனைப் பந்தன மாக்கும் புதுமையுணர்
மாசக்க ராயுதன் பாசம்வைத் தான்மலை மாதுடனே
வாசக்கு ராச்சடை வள்ளலும் வைத்தனன் வால்வனத்துப்
பாசக்க ராகினைப் பாசத்த னென்கை பழுதல்லவே.

78. பழுதுரைத் தன்றிடர்ப் பௌவமுற் றாழ்ந்த பனிமதியின்
னழுதுரைத் தன்பொடு பூசனை செய்ய வருள்சுரந்தாற்
றொழுதுரைத் தின்னிசை மஞ்சரி சூடுஞ்சு வேதவனன்
மழுவுரத் தோடடி யார்வினை பீறும் மருந்தெமக்கே.

79. மருந்துள தென்னுளப் போதத்தை நீக்கிடும் மாயைகெடுங்
கருந்துள பத்தனும் போதனு மாய்முன்னங் கண்டுணரப்
பொருந்துரு வத்தொரு தந்தப்பி ரானரும் பொற்பதமா
மிருந்துள தாமது வெண்கடத் தேதரி னிப்பொழுதே.

80. இப்பரி சிக்குணத் தானென வாளியெம் பீசனையே
செப்பரி திக்கின் றெளிரசம் பால்வனச் செம்பெருமான்
றுப்பரி திக்கெங்கும் போற்றிடத் தானிவர் தும்பிதுதிக்
கைப்பரி சிக்க வருள்வேலை யார்க்குங் கணிப்பரிதே.

81. கணித்தந்தங் கண்டவர் யாருமுண் டோவெள்ளைக் கானவனி
னினைத்தந்தங் கண்டவர் தானுமுண் டோவில்லை யேமவொற் (றை
மணித்தந்தங் கொண்டுள வாரணந் தன்னை மனத்தில்வையார்
பிணித்தொந்தங் கொண்டு நமன்வலைச் சிக்குவர் பேதையரே.

† அரா - ஆதிசேடன்.

82 பேதப் படுமெக் கடவுளர் தம்மிற் பிரமமென்றே
யோதப் படுமும்பன் மாமுக வாநின் னுபயமலர்ப்
பாதப் பரகதித் தேன்சுவைக் கும்பரி பக்குவத்தை
வாதைப் படுமனப் புட்கருள் வெண்கட மாமணியே.

83. மாமகந் தன்னின் வருமயி லூர்ந்து *வனசப்பெய
ராமகந் தன்னு மவுணனைக் காதிவெண் காடமர்ந்தோன்
வாமகந் தம்மன்னு மாங்கனிப் பாணி வரதனையே
யீமகந் தன்னுமு னங்கவன் சீர்த்தி யிசைமின்களே.

84. இசைக்கு னிறைபுகழ்ச் செல்வனை முன்ன மிருந்தவத்தா
னசைக்கு மறைபுக னம்பியென் பானௌவை நற்கபிலன் [ண்
மிசைக்கு னயமொழிப் பாவணிந் தார்கையன் வெற்றுரைதா
கசக்கு னரைவனக் காமர்செம் மேனிக் கயமுகற்கே.

85. கயவத னத்தன் குறட்படை யான்வெள்ளைக் கானிறைபங்
கயவத னத்தும கோற்கட னய்வெய்யர்க் காதியவன்
தயவத னத்தன் வனப்புரு வாயுளன் றன்னுகந்த
நயவத னத்தர் நினைப்பக லானை நவில்மின்களே.

86. நவமணந் தா†வர விந்தத்து மீவரு னங்கையைமுன்
னவமணந் தாவர விந்தம் முடிவைத்த நாதனின்மெய்ச்
சிவமணந் தாவர விந்தத் திருவடி சித்தம்வரத்
தவமணந் தாவரந் தவளா ரணியநற் சங்கரனே.

87. சங்கர வாமன தற்பர வாசத் தவளவனத்
தைங்கர வாமனத் தாலயத் தேயுறைந் தானந்தந்தா
பொங்கர வாமனத் தீமைசெய் யாணவம் பொன்றிடவே
யுங்கர வாமனற் கன்றரு ணட்டஞ்செ யுத்தமனே.

88. உதயத் தினன்வருங் காட்சிய தென்ன வொளிர்பதக்கத்
திதயத் தினன்னரைக் காடனம் புந்தி யிருந்தருள்வான்
சதயத் தினம்வருந் தந்தியை வானின் சலம்பொழிந்தே
மதிவைத் தவன்பத மாமலர் சிந்தி வழிபடவே.

* வனசப்பெயரவுணன் - கமலாசுரன். (விநாயகபுராணம்.)

† அரவிந்தத்துமீவருநங்கை - தாமரைமலரிற் குழந்தையுருவா யுதித்த வல்லபாசத்தி.

89. படங்க வினும்பணி யாபர ணன்முதற் பாலனென்றே
தடங்குல வுந்தவ ளாரணி யற்கன்பு தானுந்தவே
நடங்குல வுஞ்சர ணுகதி யின்பமு னண்ணச்செயுங்
கடங்கம ழுங்கரு ணாகர வேழமென் கண்மணியே.

90. *கண்ணிற் செருப்படி வைத்தவற் கேகதி காட்டமுந்தை
மண்ணிற் பொருப்பில் ‡வழிபறித் தானையும் மாமுனியா
யெண்ணித் திருப்பத மேத்தவைத் தாயிது கண்டதொண்டர்
தெண்ணித் திலப்பண்ணை வெண்கடக் கோனுமைச் சிந்திப்பரே.

91. சிந்திக் கரியவன் மாலய னேமுதற் றேவர்கட்கும்
வந்திக் கரியவ னலயம் வெள்ளை வனத்துளதே
தந்திக் குரியவ னையந் தன்னிற் சரணடையின்
விந்தைக் குரியவி நாயகன் சிந்தை விரவுவனே.

92. விரவுங் குடமொன்று தொங்கியுற் றூலென்ன விம்மிதஞ்சே
ரரவின் விடமன் றமிழ்ந்திட வீக்கு மகட்டினனென்
குரவன் கடமென்றுஞ் சிந்தவெண் காட்டுறை குஞ்சரந்தாட்
பரவுங் கடனென் றெமக்குள தாமவன் பணிசெய்துமே.

93. பணிவிடை யுந்தின மன்புட னுற்றவென் பாரநின்மே
லணிவிடை யுந்தின செம்பெரு மான்றரு மாரமுதே
மணியடை யிந்தனக் கொம்புள னேவெள்ளை வனமுளனே
துணிவுட னெந்தைநிற் காதல்வைத் தேனருட் டும்பியென்றே.

94. தும்பிநின் பாதத் துணைமலர்த் தேனைத் தொடர்ந்தென்மனத்
தும்பிதன் காதற் றெவிட்டிட மாந்துஞ் சுகம்வரவே
நம்பிவன் பூதக் கணபதி தாழு நரைவனத்தின்
னம்பிநின் வேதத் தலைமையுட் பூசனை நான்செய்வதே.

95. நானும ருந்தவத் தண்ணருட் டேனின்ப னுதன்றரத்
தானும ருந்தவம் பண்டையிற் செய்திலன் றமியன்வெள்ளைக்
கானினி ருந்தவப் புண்டரீ கக்கழற் காருண்யனை
வானின ருந்தவத் தொண்டுடன் பூசித்து வைகுவனே.

* கண்ணிற் செருப்படிவைத்தவர்-கண்ணப்ப நாயனர்.

‡ வழிபறித்தான்-விப்பிராதன் என்னும் பெயருடன் வழிபறிகள்வ னயிருக்கையில் நல்வினை வசத்தால் விநாயக மந்திரமுச்சரிக்கப் பெற்றுக் கணசாரூப பதவி பெற்ற புருசுண்டி முனிவர்.

96. னையமுலமர மாமறை போடற மாய்விக்கின
வெய்ய னலமர வீட்டிய விக்கின நாயகனே
துய்ய மலரி னறையென வாவி துலங்கியருள்
செய்யு முலகருட் காரணன் பால்வனச் செம்பரனே.

97. செம்ப வளத்தி முதற்கும ராவெள்ளைத் தில்லர்திகழ்
கும்ப வளச்சிந்து ரானனத் தாயெண் குணக்குன்றமே
நம்ப வளத்தினிற் கற்பக மேயென்று நானுன்னவே
நின்ப வளத்திருப் பொற்பதந் தாவுயிர் நீங்கமுன்னே.

98. முன்னவக் கோட்புரி வஞ்சத் துராசதன் மொய்ம்பழித்தே
மின்னவக் கோகன கப்பதம் வைத்தவி நாயகனே
கொன்னவக் கோட்புரி விக்கினம் பீறவெண் கோடுளதே
துன்னவக் கோட்களைந் தின்னரு டாவெண் சுரத்தவனே.

99. சுரக்கு மருட்குன்றந் தொல்லுல காருயிர் தோன்றுவிக்கும்
புரக்கி மருள்குன்றப் போதங் கொடுத்துடல் பொன்றுவிக்கு
கரக்கு மருளுக்கு வைப்பிட மாயைந்து கன்மஞ்செயும் [ங்
பரக்கு மிருணந்த வெண்காடு மேய பரஞ்சுடரே.

100. பரபஞ்ச காரியப் பண்ணவன் னீயிந்து பானுவுன்னீ
யொருபஞ்ச பாரிட மானவன்னீ யெவ் வுலகுமுன்னீ
பிரபஞ்ச வாரிக் கிறைவனுன் னீபரப் பிரமமுன்னீ
விரிகஞ்ச னேத்தரும் வெண்காட்டு ளாயின்ப வீடருளே.

திருவெண்காட்டந்தாதி
முற்றிற்று.

திருவெண்காட்டுச் சித்திவிநாயகர்

திருவூஞ்சல்.

[இது ஓர் கணேச பக்தர் பாடியது.]

1. பூமேவு மயனரிமால் புலவர்போற்றப்
பொற்பொதுவி னடமாடுபுனிதனுரும்
மாமேவு மலையரச மகளும்பெற்ற
மைந்தனெனத் திருவெண்காட் டுவந்துவாழுந்
தேமேவு கரடதட விகடகும்பச்
சிந்துரா னனசித்தி விநாயகன்மேற்
பாமேவு மூஞ்சலிசை பாடவன்னோன்
பாதபங் கயமலர்கள் பரவுவாமே.

2. சீராரும் வேதசிவா கமங்காலாகச்
சிரமாரு முபநிடதம் விட்டமாக
ஏராகும் வன்னமவை யிழையதாக
வியலாரும் பதமதுவே கயிறதாக
பாராரு மைந்தெழுத்தே பலகையாகப்
பரமாரும் பிரணவம்பொற் பீடமாக
வாராருங் கடல்வளஞ்சூழ் திருவெண்காட்டு
வாழ்சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்

3. மலரயனுந் திருமாலும் வடந்தொட்டாட்ட
மகேசுரனுஞ் சதாசிவனும் வளம்பாராட்ட
நலனருளும் ருத்திரனு ராசிசூட்ட
நல்குபரஞ் சத்தியொ டிவஞ்சீராட்ட
சலமுறுவிந் துச்சிலம்பு நாதங்காட்டச்
சந்திரசூரியர்கவிகை யாடிநீட்ட
மயிலவனுங் களிநாட்டத் திருவெண்காட்டு
வாழ்சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

4. வாசவன்பா வகன்சடைகோ டிகங்கைவாங்க
வருணன்மருத் தன்விசிறி வட்டந்தாங்க
நேசநிதிக் கோன்கையி லடைப்பைதூங்க
நிருதியமன் படிக்கமொடு படைகொண் டோங்க

வாசையறு மீசானன் மகிழ்ச்சிவீங்க
வடியரகத் தானந்த வெள்ளந்தேங்க
மாசகலார் மனமோங்கத் திருவெண்காட்டு
வாழ்சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

5. நம்புகண நாதர்கள்கைத் தாளம்போட
நவில்பூதர் மத்தளஞ்செய் நாதங்கூட்ட
தும்புருநா ரதர்தம் புருவிற்பாட
துதிபெறும்வீ ணையர்யாழிற் சுருதிகூட்ட
வம்புவிழி யரம்பையர்கள் நடனமாட
வன்பருளத் தஞ்ஞான விருளுமோட
வம்பவிழு மலர்ச்சோலைத் திருவெண்காட்டு
வாழ்சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

6. வானவர்கற் பகமலராம் மாரிதூற்ற
மாறுகரங் கொடுநந்தி மருங்கேபோற்ற
ஞானமுற்று முனிவர்திரு நாமஞ்சாற்ற
நங்கையர்கள் நாலிருமங் கலங்களேந்த
வானபரி வடியர்பல பணிகளாற்ற
வன்னையம் பிகைமுத்த மிட்டுத்தேற்ற
வானமர்கா மதலூற்றுந் திருவெண்காட்டு
வாழ்சித்தி விநயகரே யாடீரூஞ்சல்.

7. சிரத்தினவ ரத்தினம குடந்துலங்க
செவியினிற்குண் டலநுதலோ டையுமிலங்க
வுரத்துவுபவீ தம்பதக்கத் தொளிவிளங்க
வுரகப்பூ ணுற்றைக்கிம் புரிதுளங்க
கரத்தினிற்பொற் கடகமிலட் டுகம்வயங்க
கலகலெனப் பரிபுரங்கா லிற்றயங்க
வரத்திலுய ரடியர்தொழுந் திருவெண்காட்டு
வாழ்சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

8. ஆரணனு ரணன்முதலோர் தமக்கதீதா
வகத்தியன்குண் டிகைகவிழ்க்கு மம்பொற்பாதா
பூரணனே யுயிர்களினுள் ளுறையும்போதா
புனலனல்மண் விண்காலாம் பூதபேதா

காரணனே கயமுகனு மசுரநாதன்
கரிகொன்றக் கரியுருநீத் தருளுதாதா
வாரணத்தில் வயல்சூழுந் திருவெண்காட்டு
வாழ்சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

9. கட்டுவார் சடையாட மௌலியாடக்
காதினிரு குழையாடக் கடுக்கையாடச்
சுட்டிநுத லாடவிரு தோளுமாடத்
தும்பிமுக மாடவுயர் துதிக்கையாட
வட்டவரிக் குழலாட வலவையாட
மதியாட நதியாட மதமுமாட
மட்டலர்க்கா மயிலாடுந் திருவெண்காட்டு
வாழ்சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

10. நதிகொள்வா ராசரே யாடீரூஞ்சல்
நற்பூத வீசரே யாடீரூஞ்சல்
துதிவலவை நேசரே யாடீரூஞ்சல்
துய்யாக வீசரே யாடீரூஞ்சல்
அதிகபிர காசரே யாடீரூஞ்சல்
அங்குசமின் பாசரே யாடீரூஞ்சல்
மதிவதியும் மதில்புடைசூழ் திருவெண்காட்டு
வாழ்சித்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

11. மங்குன்மழை பொழிந்துவள மலிந்தேவாழி
மன்னர்செங்கோல் மநுநீதி யோடும்வாழி
பங்கமறை யாகமமும் பிறவும்வாழி
யைந்தெழுத்து னீறுமடி யவரும்வாழி
யையங்கைநால் வாயுமருண் மதமும்வாழி
யானைமுக மும்வாழி யாரும்வாழி
மங்கைவல் [illegible] வாழி திருவெண்காட்டு
வாழ்சித்தி விநாயகரே வாழி வாழி.

திருவெண்காட்டீசர்

கும்மி.

1. நாடுந் திருவருட் டெய்வம்முன் னானது
நங்கையரே யைந்து செங்கையுடன
பீடுந் தருண்மதம் பெய்யும் வெண்காட்டிற்
பேரின்ப வேழமொன் றுள்ளதடி.

2. உள்ளந் தனிவரு மாணிக்க தீபம
துத்தம பத்தி யுடையவர்க்கே
வெள்ளக் களிமத னாறுஞ் சொரிந்தந்த
வெண்காட் டுகந்திடும் வேழமடி.

3 வேழ முகப்பெரு மானடி வேட்கையர்
வேண்டுழி வந்து வினைகெடுத்தென்
னாளு மகத்தினி னாடும் பொருடர
நண்ணு னரைவன நாதனடி.

4. நாதனில் லாதப ரமனடி யவ
னற்றவர் மாந்து னறைமதுவே
போதமில் லாதவர் புந்தியி ரான்சுரர்
போற்றும்வெண் காட்டிற் புனிதனடி.

5. புகலுஞ் சுருதித் தலைவ னடியவன்
புண்ணிய வித்தடி பூவையரே
யகலுஞ் சுரமுத லான பிணிவெள்ளை
யாரணி யன்னடி பேணுமடி

6. பேணும் பெருந்தகை யாளனடி யவன்
பெற்ற மிசைவரு கொற்றவன் சேவடி
காணு மருந்தவர் காதலித் தேத்தவெண்
காடுறையும் மொரு கோடனடி

7. கோட்டுக் கரியை வச மாக்கியருள்
கூர்ந்தெலி வாகன மாகச்செய்தே
வீட்டுக் குரிய வழிகாட் டித்திரு
வெண்கா டுகந்த விமலனடி.

8. விக்கினஞ் சிந்துவி நாயக னுமவன்
மெல்லடி பற்றுமின் மெல்லியரே
யிக்கண மந்தகன் வந்திடு வான்முன்ன
மின்பவெண் காடனை யெண்ணுமடி.

9 எண்ணுக் கடங்காத லீலை புரிந்தவ
னேந்தல்வி நாயக னேந்திழையீர்
கண்ணுக் கடங்காத காட்சிய னாம்வெள்ளைக்
கானவன் சீரைக் கழறுமடி.

10. கந்தனை முந்திக் கனிவாங் குஞ்சுகக்
கற்பக மாமடி கன்னியரே.
சிந்தனை முந்திச்செய் தெய்வமென் றேவெள்ளைத்
தில்லம்வந் தானைநீர் செப்புமடி.

11 செப்பினை யொத்த தனத்துமை யாடன்
செங்கை வருடிய செல்வமு தன்மக
னப்பினை யொத்துயிர் யாவும்பு ரப்பவ
னந்தவெண் காட்டுறை யையனடி.

12. ஐயுமி லன்பருக் காரமு தாமவ
னல்லல் களைந்திட வல்ல மருந்தடி
செய்யவ ரத்த மலர்த்திரு மேனியன்
சித்தன் னரைவனத் தேவனடி.

13. தேவர் முதற்பதி னெண்கண நாயகன்
சித்திவி நாயகன் றேன்மொழியீர்
மூவர் பதந்தொழில் முன்னைவி தித்தவன்
முத்தன்வெண் காட்டு முதல்வனடி

14. முத்தி கொடுக்கு முதன்மைய னாமடி
மோன விரத முனிவர்கட்கே
பத்தி கொடுத்திடு னங்களுள் ளத்தினிற்
பால்வனத் தானைநீர் பாடுமடி.

15. பாடுமின் மூடிக வாகன மேல்வரும்
பண்ணவன் சீரினைப் பாவையரே
கூடுமின் வெள்ளை வனத்தவ னாலயங்
குஞ்சரம் முன்னர்க்கூத் தாடுமடி.

16. கூத்த னடிமுன்னந் துட்டரைக் கொன்றிடக்
    கோளரி மாமயி லூர்ந்தபிரா
னேத்து மடியார்க் கெளியவ னுமடி
    யெங்கள்வெண் காட்டி னிறைவனடி.

17. இறைவ னடியவ னெச்சகத் தாருக்கு
    மிச்சைத ணித்துறு மச்சமொழிப்பவன்
மறைவ னடியரு ளில்லையென் பாருக்கு
    மன்னும்வெண் காட்டு வரதனடி.

18. வரத மபய மிரு கரமாய்
    மற்றவை கொம்பொடு மோதகமாய்
பரவு மிபவத னத்த னெழிலுருப்
    பால்வனத் தேவந்து பாருமடி.

19. பார்சுவ மாமுனிப் பள்ளியிற் பிள்ளையாய்ப்
    பாற்கர னல்லி லுதித்துவந் தாலெனப்
பேரொளி தந்த பெருமா னிவனெனப்
    பேசும்வெண் காட்டுமுன் னோனையடி.

20. பெண்மணி யாமந்த வல்லபா சத்தியைப்
    பிஞ்ஞகனுகி வதுவை புரிந்தவன்
கண்மணி செம்மணி வண்ணத்து நாதனைக்
    காமர்வெண் காட்டினிற் காணுமடி.

21. காதல் மிகுந்துள கன்னிய ரேயிந்தக்
    காலத்தை வீணிற் கழிக்காமே
சோதிவெண் காட்டுவி நாயகன் முன்னர்ப்போய்த்
    துள்ளித்துள் ளிக்கும்மி கொட்டுமடி.

எச்சரீக்கை.

இராகம் - சாவேரி. தாளம் - சம்பை.

தாரார்கய முனியேயொரு தந்தா—எச்சரீக்கை
    தண்ணார்புனன் முடியாய்குகற் கண்ணு—எச்சரீக்கை
நேரார்புர னீறாக்கிய நிமலன்றரும்—பாலா
    நித்தந்தொழச் சித்தந்தனி னிறைவா—எச்சரீக்கை
காரார்தினைப் புனத்தேவந்து கந்தற்கரு டந்தா

    கதிரார்மணிப் பணிவீக்கிய வதிபா—எச்சரீக்கை
சீரார்பிர ணவமாயொளிர் செல்வா—எச்சரீக்கை
    சிந்தாகுல னந்தாயரு ளெந்தாய்—எச்சரீக்கை.
கற்றுருளக் கோயில்லுறை களிறே—எச்சரீக்கை
    கமலாசன முற்றவாளையுந் தருவாய்—எச்சரீக்கை
மற்றுருமொப் பில்லாமணி வண்ணு—எச்சரீக்கை
    வாளிந்தன நுதல்வல்லபை மகிழ்நு—எச்சரீக்கை
முற்றுகமுன் னவுணன்றனை முனிந்தாய்—எச்சரீக்கை
    முன்னூரண னம்பிக்கருள் மன்னு—எச்சரீக்கை
உற்றூர்க்கருள் வற்றுக்கட லொருநீயுயிர்த் தலைவா
    வோதக்கடல் வெண்காட்டினு வாவே—எச்சரீக்கை.

பராக்கு.

இராகம் - நவரோஸ். தாளம் - சம்பை.

ஆதிசிவ மங்குரிக்கு மரசே—பராக்கு
    அந்தமறை யந்தணனுக் கருளாய்—பராக்கு
சோதிசிவ சங்கரிக்குச் சுதனே—பராக்கு
    சொல்லுமருட் செல்வந்தருஞ் சுகனே—பராக்கு
பூதகண நாதருக்குப் புகலே—பராக்கு
    புண்ணியர்தங் கண்முன்வரும் புனிதா—பராக்கு
சீதகல முன்னுதிக்குந் தேவே—பராக்கு
    செய்யவெள்ளைக் கானின்வருஞ் செல்வா—பராக்கு.

செந்தமிழின் முந்துமௌவை செப்புமொழி கொண்டே
    தேசுறுகை லாசமலை சேர்த்தாய்—பராக்கு
விந்தையுறுந் தந்திமுக விமலா—பராக்கு
    வேதமொழிக் காதிமனு வானாய்—பராக்கு
இந்தனைய தந்தமொன்றால் வந்தகரி மாய்த்தே
    யேமவெலி வாகனஞ்செய் வாமா—பராக்கு
கந்தமலர்ச் செந்திருவெண் காடா—பராக்கு
    கற்பகச்செந் தேன்கமழுங் கனியே—பராக்கு.

இராகம் - மத்தியமாவதி.   தாளம் - ஏகம்.

பிள்ளைவடி வானவற்கும்—லாலிலாலி
    பேசுமறு வானவற்கும்—லாலிலாலி
வெள்ளமதம் பாய்பவற்கும்—லாலிலாலி
    வேட்கைவினை காய்பவற்கும்—லாலிலாலி
துள்ளுமெலி பாகருக்கும்—லாலிலாலி
    தும்பிமுக வேகருக்கும்—லாலிலாலி
வெள்ளைவன நாயகற்கும்—லாலிலாலி
    விக்கினவி நாயகற்கும்—லாலிலாலி.

வான்பரவு ராசருக்கும்—லாலிலாலி
    வல்லபைக ணேசருக்கும்—லாலிலாலி
சாம்பசிவன் பாலருக்கும்—லாலிலாலி
    தங்குமருட் சீலருக்கும்—லாலிலாலி
பாம்புதர பந்தனற்கும்—லாலிலாலி
    பார்ப்பதியா னந்தனற்கும்—லாலிலாலி
சாம்பிறவி தீர்ப்பவற்கும்—லாலிலாலி
    தன்பதவி சேர்ப்பவற்கும்—லாலிலாலி.

மங்களம்.

இராகம் - சுருட்டி.   தாளம் - திரிபுடை.

மங்களம் மங்களம் மங்களம் நித்ய சுப செய மங்களம்.

அஞ்சுகர மன்னவற்கும் ஆறுமுகர் முன்னவற்கும்
செஞ்சிலம்புப் பாதருக்கும் தெய்வநவ நீதருக்கும்—
    மங்களம்மங்களம் மங்களம் நித்ய சுப செய மங்களம்.

மேவுகண நாயகற்கும் விக்கினவி நாயகற்கும்
பாவநாச வையருக்கும் பாசமேந்து கையருக்கும்—மங்களம்.

மத்தகக்க யானனற்கும் வல்லபைமணாளருக்கும்
சித்திபுத்தி யோடிருக்கும் செந்திருவெண் காடருக்கும்
—மங்களம்.